Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**STC.No. 494/2024**

**Deposition of PW.5 (LW.5)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நாட்ராயண் | ஜாதி | : | |
| த/பெ | : | கூழ் | தொழில் | : | கறி கடை வைத்துள்ளேன். |
| கிராமம் | : | பாலத்துப்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 70/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.05.2026.

(எதிரி ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் பாலத்துப்பட்டியில் குடியிருந்துகொண்டு கறி கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

**Sd/-Thiru. S. Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor

Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**STC.No. 494/2024**

**Deposition of PW.6 (LW.6)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கௌதம் | ஜாதி | : | |
| த/பெ | : | ராஜா | தொழில் | : | கறி கடை வைத்துள்ளேன். |
| கிராமம் | : | பாலத்துப்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 23/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.05.2026.

(எதிரி ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் பாலத்துப்பட்டியில் குடியிருந்துகொண்டு கறி கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. கடந்த 2 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் என் தாத்தாவுக்கு உடம்பு சரியில்லை என்று பாக்கிய மீனா மருத்துவமனைக்கு நான் சென்றிருந்தேன். அப்போது காலை 09.00-09.30 மணிக்குள் மருத்துவமனைக்கு எதிர் திசையில் இருசக்கர வாகனத்தில் வந்த நபரின் மீது பஸ் மோதியது. சத்தம் கேட்டு நான் சென்று பார்த்தேன். காயம்பட்ட நபருக்கு எந்த இடத்தில் காயம் ஏற்பட்டிருந்தது என்று எனக்கு நியாபகமில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்து எந்த தேதியல் நடைபெற்றது என்றால் நியாபகமில்லை. விபத்தில் சம்மந்தமுடைய இருசக்கர வாகனத்தின் பதிவெண் தெரியுமா என்றால் தெரியாது. விபத்தில் சம்மந்தமுடைய பஸ்சின் பதிவெண் தெரியுமா என்றால் தெரியாது. எவ்வளவு நாட்கள் கழித்து போலிசார் உங்களிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சம்பவத்தன்றே வாங்கினார்கள். நீங்கள் கையொப்பம் செய்தது தட்டச்சு செய்யப்பட்டிருந்ததா அல்லது வெற்றுப் பேப்பரா என்றால்

நியாபகமில்லை. நீங்கள் சம்பவத்தை பார்க்கவில்லை என்றும், யாருடைய கவனக்குறைவினால் விபத்து ஏற்பட்டது என்று உங்களுக்கு தெரியாது என்றும், போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

**Sd/–Thiru. S. Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor

Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**STC.No. 494/2024**

**Deposition of PW.7 (LW.7)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | காசிராஜன் | ஜாதி | : | |
| த/பெ | : | காமாட்சி | தொழில் | : | டீ கடை வைத்துள்ளேன். |
| கிராமம் | : | சி. கூத்தம்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 30/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.05.2026.

(எதிரி ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் சி. கூத்தம்பட்டியில் குடியிருந்துகொண்டு டீ கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வைமகசரில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பத்தை பாக்கிய மீனா மருத்துவமனைக்கு அருகில் வைத்து செய்து கொடுத்தேன். அந்த கையொப்பம் மட்டும் **(அ.சா.ஆ.2/PW.7)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. செம்பட்டி காவல்நிலைய உதவி ஆய்வாளர் சம்பவ இடத்திற்கு வந்து வரைபடம் வரைந்துகொண்டிருந்தார். என்னுடன் சேர்ந்து என் நண்பர் சூர்யா என்பவரும் கையொப்பம் செய்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

உங்களுடன் கையொப்பம் செய்தவரின் தந்தை பெயர் என்னவென்றால் இளங்கோ ஆகும். நீங்கள் குடியிருந்து வருவது நிலக்கோட்டை செல்லும் வழியில் உள்ள சி. கூத்தம்பட்டி என்றால் சரிதான். உங்கள் நண்பர் குடியிருந்து வரும் ஊர் என்னவென்றால் RVS college அருகில் உள்ள பாலத்துப்பட்டி ஆகும். எதற்காக படம் வரைந்தார்கள் என்று உங்களுக்கு தெரியுமா என்றால் விபத்து நடந்ததை பற்றி விசாரித்தும், சுற்றி என்ன உள்ளது என்று விசாரித்து வரைபடம்

வரைந்தார்கள். பார்வைமகசரில் என்ன எழுதியுள்ளது என்று உங்களுக்கு தெரியாது என்றால் நான் படித்துப் பார்க்கவில்லை. ஆனால் என்னிடம் சொன்னார்கள். போலிசார் கேட்டுக்கொண்தற்கிணங்க பார்வைமகசரில் என்ன எழுதியுள்ளது என்று பார்க்கமால் கையொப்பம் செய்துள்ளீர்கள் என்றால் சொன்னதன் அடிப்படையில் கையொப்பம் செய்தேன்.

**Sd/–Thiru. S. Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor